1974 மார்ச் 28]

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சை மாவட்டத்தில் உழவர் கூட்டுறவு காகித ஆலை அமைத்து, அங்குள்ள வைக்கோல் மூலம் காகிதம் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்படி ஒரு முயற்சி இதுவரையில் இல்லை. அதற்கான முயற்சிகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

*Vehicles belonging to Co-operative Societies.*

* 660 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether surcharge is imposed on Clerks for using vehicles in the Co-operative Societies without permission by the Government; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) வண்டிகளைப் பேணி வருவதற்காகக் கூட்டுறவுச் சங்கத்தினால் கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள், கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வண்டிகளைப் பயன்படுத்துவதற்குப் பொருந்துகின்றன. இதற்கு அரசின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கு கட்டணம் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற எரிபொருள் விலை யேற்றத்தின் அடிப்படையில் இந்த ரேட்டுகளை மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா ? அப்படியானால் அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** வாகனங்களைப்பற்றி கேட்டிருப்பது—பிளஷர் கார், ஜீப் பற்றியது இந்தக் கேள்வி. மற்ற வாகனங் களைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு தனிக் கேள்வி போடவும்.

*Price of Coconut oil.*

* 661 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Government are aware of the sudden spurt in prices of coconut oil in this State during October 1973; and

(*b*) if so, the action taken thereon ?